# இலங்கையில் COVID 19 நோய்ப் பரம்பலுக்கு பின்னரான நிலையை அறிக்கையிடும்

## MediaCorps பின்தொடரல் மாணவர்களுக்கான

## கையடக்கத் தொலைபேசி கதை தயாரிப்பு வழிகாட்டல்கள்

முதலாம் பதிப்பு: மார்ச் 22, 2020
இரண்டாம் பதிப்பு: ஜுன் 25, 2020

**தயாரிப்பு:**

**இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் (SDJF)**
**மற்றும்**
**ஊடகம் மற்றும் தகவல் அறிவுக்கான நிலையம் (CMIL)**

## COVID-19 நோய்ப்பரம்பலுக்கு பின்னரான யதார்த்தங்கள் மற்றும் எதிர்வரும் தேர்தல்கள் மீதான பிரதிபலிப்புகள்: MediaCorps செய்தி சஞ்சிகை – கட்டம் 02

**அறிமுகம்:**

இவ்வழிகாட்டியானது முன்மொழியப்பட்டுள்ள அறிக்கையிடல் காலப்பகுதியில் COVID-19 நோய்ப்பரம்பலுக்கு பின்னரான நிலை மற்றும் தேர்தல் காலம் என்பன பற்றி தமது ஸ்மார்ட் போன் ரக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி பல் ஊடகக் கதைகளைத் தயாரிக்கும் MediaCorp பின் தொடரல் மாணவர்களுக்கு உதவும் மற்றும் வழிகாட்டும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும். இலங்கை இந் தொற்று நோயினை எதிர் கொண்ட பின்னர் புதியதொரு வழமை நிலைக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றது. எனினும் இந்த அளவில் ஏற்பட்ட அவசர நிலையில் இருந்து விரைவாக மீளத் திரும்புவது இயலாத விடயமாகும். இலங்கையில் COVID-19 தொற்று நோயின் பின்னர் பல துறைகளில் நேர்மறையான மற்றும் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. கல்வி, சர்வதேச உறவுகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் துறைகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் தொழிற்துறைகள் என்பன பாதிப்படைந்த துறைகளில் உள்ளடங்குவதோடு அடிப்படையில் மக்களின் வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. COVID-19 தொற்று நோய்க்கு மத்தியிலும் பாராளுமன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ளன. இதனிடையில், இவ்வழிகாட்டியானது தொற்று நோய்க்கு பின்னரான நிலை மற்றும் தேர்தல் சூழ்நிலை என்பவற்றின் கீழ் அறிக்கையிடல் திட்டம் மற்றும் நியம இயங்கு வழிமுறைகள் (Standard Operating Procedures/SOP) உருவாக்கம் பற்றிய அடிப்படைத் தகவல்களை அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) என்ற வடிவில் வழங்குகின்றது.

## MediaCorps புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்

SDJF நிறுவனம் MediaCorps பின்தொடரல் மாணவர் நிலை நிகழ்ச்சித்திட்டத்தினை USAID நிறுவன நிதியுதவியுடன் IREX நிறுவனம் முன்னெடுக்கும் ஜனநாயக இலங்கைக்கான ஊடக வலுப்படுத்தல் (MEND) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

முன்னோடி அணுகுமுறையான MediaCorps நிகழ்ச்சித்திட்டம் தமது சொந்த சமூகமல்லாத சமூகம் ஒன்றில் வாழ்வினை அனுபவித்த பல்வேறுபட்ட மத நம்பிக்கை, இன மற்றும் மொழிப் பின்புலங்களைக் கொண்ட இளம் ஊடகவியலாளர்களை ஈடுபடுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். நிகழ்ச்சித் திட்டத்தின் பொழுது பங்குபற்றுனர்கள் சோடிகளாகப் பணி புரிவர். ஒருவர் மற்றையவரின் சூழலில் வாழ்ந்து பரஸ்பரம் சமூகங்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றிய தமது புரிதல்களை ஆழமாக்குவதுடன் வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களுடன் உறவுகளைக் கட்டியெழுப்பவும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். இளம் ஊடகவியலாளர்கள் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றில் கவனக்குவிவு கொள்ளல், தமது கலாச்சாரத்

தடைகள் பற்றிய பிரதிபலிப்புகளை மேற்கொள்ளல் மற்றும் கூட்டிணைவு மிக்க பல் ஊடகக் கதைகளைத் தயாரித்தல் என்பவற்றுக்கும் தேவையான தளத்தை வழங்குகின்றது.

கடந்த இரண்டு வருடங்களில் SDJF நிறுவனம் 112 இற்கும் மேற்பட்ட இளம் ஊடகவியலாளர்களைப் பயிற்றுவித்ததுடன் நாடளாவிய ரீதியில் 100 இற்கும் மேற்பட்ட பல் ஊடகக் கதைகளைத் தயாரித்துள்ளது. இவ்வூடகவியலாளர்கள் முரண்பாடு கூருணர்திறன் மிக்க அறிக்கையிடல், பால்நிலை கூருணர்திறன் மிக்க அறிக்கையிடல் MoJo (செல்லிடப் பேசி ஊடகவியல்) கதை தயாரிப்பு ஆகிய விடயங்களில் பயிற்றப்பட்டுள்ளனர்.

## MediaCorps Watch செய்திச் சஞ்சிகை நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் (SDJF) மற்றும் ஊடகம் மற்றும் தகவல் அறிவுக்கான நிலையம் (CMIL) என்பவற்றின் இணைந்த முயற்சியான MediaCorps Watch நிகழ்ச்சித் திட்டம் சமூக ஊடகத்தில் 3.5 மில்லியன் வாசகர்களைச் சென்றடைந்தது. இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்பட்ட COVID-19 தொற்று நோய்ப்பரம்பல் பற்றிய சூழ்நிலைத் தகவல்களை வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய கவனக்குவிவாகக் காணப்பட்டது. இத்திட்டம் இரண்டு மொழிகளிலும் COVID-19 பற்றிய 50 நாளாந்த சஞ்சிகைகளை உருவாக்கியது. MediaCorps Watch செய்திச் சஞ்சிகையின் நோக்கம் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள COVID-19 காலப்பகுதியுடன் தொடர்புடைய அவசியமான மற்றும் சரிபார்க்கப்பட்ட செய்திகள் மற்றும் கதைகளை அறிக்கை செய்வதாகும். ஓரங்கட்டப்பட்ட குழுக்களில் கவனக்குவிவு கொண்டிருந்த இந்நிகழ்ச்சித்திட்டத்தில் ஸ்மார்ட் போன் தொழிநுட்பத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டது.

இச்சஞ்சிகையின் உள்ளடக்கத்தில;

(i) நாளாந்த புதுத் தகவல்கள்,
(ii) கிராம மட்டத்தில் கையாளப்பட வேண்டிய பொறிமுறைகள்,
(iii) மனித நலன் மிக்க கதைகள்
(iv) கொரோனா வைரஸை முகாமைத்துவம் செய்வதில் உள்ள நம்பிக்கை மற்றும் வெற்றிக் கதைகள் போன்ற விடயங்கள் அடங்கியிருந்தன.

எவ்வாறாயினும், MediaCorps Watch நிகழ்ச்சித்திட்டத்துக்கு 19 மாவட்டங்களைச் சேர்ந்த 59 பின் தொடரல் மாணவர்கள் 100% தமது ஸ்மார்ட் போன் ரக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி 265 காணொளி உள்ளடக்கங்களைத் தயாரித்து வழங்கினர். இந்நிகழ்ச்சித்திட்டமானது 33 இற்கும் அதிகமான சமூக ஊடகத் தளங்களின் ஊடாக பரப்பப்பட்டதுடன் அது கிட்டத்தட்ட 3.5 மில்லியன் வாசகர்களைக் கவர்ந்தது.

இத்திட்டத்தின் ஊடாக பல தாக்கங்கங்களை ஏற்படுத்த முடிந்தது சந்தோசமடைய வைக்கின்றது. இத்திட்டத்தில் பங்கு பற்றிய ஊடகவியலாளர்களில் 40% ஆனவர்கள் பெண்களாகக் காணப்பட்டது குறிப்பிடப்படத்தக்கது. அத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டம் இளம் ஊடகவியலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியது. முக்கியமாக, MediCorps Watch திட்டத்தின் ஊடாக நாடு பூராகவும் செய்திகள் மற்றும் கதைகளை சேகரிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. இது பிரதான நீரோட்ட ஊடகங்களினால் கூட மேற்கொள்ளப்பட முடியாத விடயமாகக் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் பொது மக்களிடம் இருந்து உதவிகளைப் பெறுவதும் சாத்தியமானது.

**சூழமைவு**

ஜூன் 25 ஆம் திகதியன்று வரை இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தி ஒன்றாகக் (2001) காணப்படுகின்றது. இவ்வெண்ணிக்கையில் 1562 நோயாளர்கள் பூரணமாகக் குணமடைந்துள்ளதுடன் 11 மரணங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. மொத்தமாக 99983 கொரோனா வைரசுக்கான PCR பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் மாத இறுதிப்பகுதியில் இருந்து அரசாங்கம் COVID-19 தொற்றுநோய்க்குப் பின்னரான காலப்பகுதியில் மக்களின் வாழ்வினை இயல்பு நிலைக்கு மீளக் கொண்டுவரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. சுகாதார அதிகார சபைகளின் தகவல்களின் படி ஏப்ரல் 30 ஆம் திகதி தொடக்கம் எந்த ஒரு புதிய COVID-19 தொற்றுகளும் சமூக மட்டத்தில் கண்டறியப்படவில்லை. இதன் விளைவுகளில் ஒன்றாக கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி தொடக்கம் மக்கள் சேவைக்காக பொதுப் போக்குவரத்து வசதிகள் மீள ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அரசாங்கம் மே மாத நடுப்பகுதி தொடக்கம் அலுவலகங்கள் மற்றும் வர்த்தகங்களை பகுதியளவில் திறக்குமாறு கட்டளையிட்டது. ஜூன் மாத ஆரம்பப் பகுதி முதல் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டதுடன் பொதுப் போக்குவரத்தும்

வழமைபோல அனுமதிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அரசாங்கம் வழங்கும் சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது.

ஏதிர்மாறாக, பாடசாலைகள் மாணவர்களுக்காக எதிர்வரும் ஜூலை 7, 2020 அன்றே திறக்கப்படவுள்ளன அத்துடன் இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சு உல்லாசப் பயணிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி முதல் நாட்டுக்கு பயணிக்க முடியும் என அறிவித்துள்ளது. இருந்தும் பயணிகள் விமானத்தில் ஏறுவதற்கு 72 மணி நேரத்துக்கு பிந்தாமல் பெறப்பட்ட COVID-19 தொற்று அற்றவர்கள் எனப் பெறப்பட்ட சான்றிதழைக் தம்முடன் எடுத்து வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதன் விளைவுகளில் ஒன்றாக இலங்கையின் பிரதான விமான நிலையங்களாக பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம், கொழும்பு மற்றும் மஹிந்த ராஜபக்ச விமான நிலையம், ஹம்பாந்தோட்டை என்பன உல்லாசப் பயணிகளின் வருகைக்காக தமது செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கவுள்ளன. மேலதிகமாக, இலங்கையின் அரச ஊழியர்கள் பகுதியளவிலான ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் தமது பணிகளை மே மாதம் 11 ஆம் திகதி முதல் ஆரம்பித்தனர். அத்துடன், மே மாதம் 25 ஆம் திகதி முதல் இலங்கையின் உல்லாச விடுதிகள் மற்றும் உணவகங்கள் கட்டுப்பாடுகளுடன் மீளத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டன அத்துடன் அனைத்து திரைப்பட அரங்குகளும் பொதுமக்கள் பாவனைக்காக ஜூன் 27 ஆம் திகதி முதல் திறக்கப்படலாம் என கலாச்சார விவகாரங்களுக்கான அமைச்சு அறிவித்துள்ளது. அனைத்து விடயங்களும் மெதுவாக வழமைக்கு திரும்புவதாகத் தோன்றும் நிலையில் பாராளுமன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம் பெறும் என இலங்கையின் தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

எவ்வாறாயினும், வழமை போன்று எதிர்வரும் தேர்தலிலும் தவறான தகவல்கள் (Mis-information) மற்றும் பிழையான தகவல்கள் (Dis-information) என்பன பல்வேறுபட்ட ஊடக வடிவங்கள் ஊடாக வெகுவாகப் பரவலடையும் உயர் சாத்தியம் காணப்படுகின்றது. ஒரு நாடாக இலங்கை எதிர்வரும் சில மாதங்களில் அரசியல் ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக அதிக எண்ணிக்கையான சவால்களுக்கு முகங்கொடுக்கவுள்ளது. சமூக ஊடகம் மற்றும் பிரதான நீரோட்ட ஊடகங்களின் ஊடாக பிரதானமாக வெளிவரும் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளின் ஊடாக மக்கள் தவறாக வழி நடத்தப்படுவதற்கான சாத்தியம் உள்ளது. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டம் நாடு பூராகவும் மக்கள் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளும் வகையில் முக்கியமான மற்றும் சரிபார்க்கப்பட்ட செய்திகளைப் பெற உதவும் எனவே, மக்களால் சரியான

தீர்மானங்களை மேற்கொள்ள முடிவதுடன் சிறந்த எதிர்காலத்துக்காக சரியான முன்னெடுப்புகளை வடிவமைக்க முடியும். மேலதிகமாக இந்நிகழ்ச்சித்திட்டம் பொறுப்பான ஊடகவியலாளர் ஒருவர் எவ்வாறு அறிக்கையிட வேண்டும் என்பதற்கான உதாரணத்தை உருவாக்கும்.

## MediaCorps ஐ பின்தொடருவோருக்கான வழிகாட்டல்கள்.

### 'கதை' என்ன?

இந்த விசேட அறிக்கையிடல் காலப்பகுதியில் MC Fellows தயாரிக்கவுள்ள கதைகளில் கீழ் வரும் விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டும் என SDJF / CMIL ஆகியன எதிர்பார்க்கின்றன.

1. **பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல்:** COVID-19 இற்குப் பின்னரான நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப மக்கள் நாட்டின் ஆழமான பொருளாதார மந்த நிலையில் இருந்து மீள்வதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், முன்னெடுப்புகள் மற்றும் மூலோபாயங்கள் எவை? விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவுகள், மகிழ்வூட்டும் தொழிற்துறை (Entertainment Industry), விவசாயம், சுற்றுலாத்துறை, மீன்பிடித்துறை, தொழிற்துறை மட்டும் மற்றும் வேலையின்மைப் பிரச்சினைகள். தொற்று நோய் காரணமாக எதிர்நோக்கும் பொருளாதார மந்த நிலையை போக்குவதற்கு மக்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட தொழிற்துறைகள் எவ்வாறு பணிபுரிகின்றன?

2. **ஏனைய மக்கள் ஆர்வக் கதைகள்** : COVID-19 கட்டுப்பாடுகளுக்கு பின்னர் தங்களது வாழ்வாதாரத்தை ஆரம்பிக்க முயற்சிக்கும் மக்களது சவால்கள், சமூக தொற்றை குறைப்பதற்காக சுகாதார திணைக்களங்கள் எடுத்துள்ள முன் ஆயத்தங்கள், கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள், வேறு ஏதாவது புத்தூக்க செயற்பாடுகள் காணப்படுமாயின் அவற்றை கதைகளாக உருவாக்குதல்.

3. **நம்பிக்கை ஊட்டுகின்ற உத்வேகத்தை ஏற்படுத்துகின்ற கதைகள்** : மக்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்துகொள்கிறார்களா? சமூகங்கள் ஒன்றிணைகின்றனவா? இந்த நெருக்கடியிலும் ஏதும் நல்ல செய்திகள் இருக்கின்றனவா?

**கதைக்கான கருப்பொருட்கள் (Themes) எவை?**

MediaCorps Watch நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம் COVID-19 நோய்த்தொற்றுக்குப் பின்னரான அறிக்கையிடலில் கவனக்குவிவு கொண்டதாகக் காணப்படுவதுடன் ஒவ்வொரு நிகழ்ச்சியும் குறிப்பிட்ட ஒரு கருப்பொருளை சுட்டிக்காட்டுவதாக அமைய வேண்டும். அடையாளம் காணப்பட்ட ஒரு சில கருப்பொருட்களில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன:

> தொற்று நோய்க்குப் பின்னரான காலப்பகுதியில் பொருளாதார விளைவுகள் (Economic Implications), SME அபிவிருத்தி, விவசாயம், கல்வி, பெண்கள் மற்றும் ஏனைய பால்நிலைக் குழுக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பொருட்களின் சந்தை விலைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் தொழிற்துறைகள், வங்கியியல் மற்றும் நிதியியல், சூழல் மற்றும் சுகாதாரத் துறை.

**கதை வடிவம் (Format) என்ன?**

அது காணொளிக் கதையாக மாததிரம் அமைய வேண்டும். கருவியாக ஸ்மார்ட் போன் அமைய வேண்டும். அனைத்துக் கதைகளும் கிடையாக (Horizontally) படம் பிடிக்கப்பட வேண்டும். நிலைக்குத்தாக (Vertically) எடுக்கப்பட்ட காணொளிகள் மீளாய்வின் பொழுது நிராகரிக்கப்படும்.

**கதையின் நேர வரையறை (Duration) என்ன?**

கதை அமையும் நேரம், குறைந்தது 01 நிமிடம் கூடியது 03 நிமிடங்கள்.

**கதையை எப்படி சமர்ப்பிக்க வேண்டும்?**

MC Fellows கதைகளை தயாரித்தால், இந்த நோக்கத்திற்காக வேண்டியே அமைக்கப்பட்ட SDJF / CMIL இன் தெரிவுக் குழாமிற்கு (Editorial board) அவர்களுடைய கதைகளை சமர்ப்பிக்க வேண்டும். இந்த சமர்ப்பிப்பு Google Drive அல்லது ஒரு கோவை மாற்று இயங்கு தளம் ஊடாக சமர்ப்பிக்கப்பட முடியும். WeTransfer செயலி ஊடாக சமர்ப்பிப்பது சிறந்தது. கதையைச் சமர்ப்பிக்கும் பொழுது அதன் சுருக்கம் மற்றும் கதையுடன் தொடர்புடைய ஏனைய தகவல்களும் (5WH) முறையில் அனுப்பப்பட வேண்டும்.

**கதையை நாம் எப்போது சமர்ப்பிக்க வேண்டும்?**

கதைகள் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 3.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறித்த நாளில் இக்கால எல்லையை பூர்த்தி செய்யும் கதைகள் மாத்திரமே தெரிவுக் குழாத்தினால் (Editorial Board) மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். பிற்பகல் 3.00 மணிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும்

கதைகள் அடுத்த நாளுக்கான தெரிவுக் குழாத்தின் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும்.

**நாம் மட்டறுக்கப்பட்ட (Edited) கதையை சமர்ப்பிக்க வேண்டுமா அல்லது காணொளி எடுக்கப்பட்டவாறே சமர்ப்பிக்க வேண்டுமா?**

பின்தொடரல் மாணவர்கள் மட்டறுக்கப்பட்ட கதைகளையே அனுப்ப வேண்டும். விதிவிலக்கான சூழ்நிலைகளில் தெரிவுக்குழு மட்டறுக்கப்படாத காணொளிகளையும் ஏற்றுக் கொள்ளும். அவ்வாறான காணொளிகள் அனுப்பப்படும் பட்சத்தில் கதையின் முழுமையான தெளிவான சுருக்கம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

**எனது கதைக்கு இசை (BGM), உப தலைப்புகள் (Subtitle) மற்றும் பெயர் குறிப்பு (Name Tag) என்பவற்றை இட முடியுமா?**

நீங்கள் உங்களின் கதைகளை Edit செய்யும் பொழுது பின்னணி கதைச் சுருக்கத்தை இணைக்க முடியும். எவ்வாறாயினும், சாத்தியமான காப்புரிமைப் பிரச்சினைகள் காரணமாக பின் தொடரல் மாணவர்கள் தமது கதைகளுக்கு எந்த வித இசையையும் சேர்க்கக் கூடாது. அத்துடன் பின் தொடரல் மாணவர்கள் நேர்காணல்களுக்கு உட்படுத்தப்படுவோருக்கு எந்த வித பெயர் அட்டைகளையும் இடக்கூடாது. நேர்காணல்களுக்கு உட்படுத்தப் படுபவர்களின் பெயர் மற்றும் பதவிநிலைகள் என்பன அவை தோன்றும் ஒழுங்கில் வேறாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**எனது கதை எவ்வாறு மதிப்பிடப்படும்?**

அனைத்துக் கதைகளும் கட்டம் 1 இல் பயன்படுத்தப்பட்ட கதை மதிப்பீட்டுக் கருவி கொண்டே மதிப்பிடப்படும். அனைத்துக் கதைகளும் அவற்றின் கதை உள்ளடக்கம் மற்றும் தொழில்நுட்பத் தரம் என்பவற்றுக்காக மதிப்பிடப்படும். நடுநிலையான, நீதியான மற்றும் துல்லியமான மதிப்பீட்டினை உறுதி செய்வதற்காக அனைத்துக் கதைகளும் மூன்று பிரிவுகளின் கீழ் 20 சுட்டளவுகளைப் (Parameters) பயன்படுத்தி மதிப்பிடப்படும். அவற்றுக்கு மொத்தமாக 100 புள்ளிகள் வழங்கப்படும்.

I. **அடிப்படை வழிகாட்டல்களுக்கு ஒத்திசைதல்:** நிகழ்வின் முக்கியத்துவம், கதையின் முழுமைத் தன்மை, காரண காரிய ஒழுங்கு (Logical Flow) வழிகாட்டுனர்களுடன் பேணப்பட்ட ஒருங்கிணைப்பு, உண்மைத்தன்மை மற்றும் யதார்த்தங்களின் சோதனை.
II. **ஊடகவியலாளர் நியமங்கள்:** உரிய நேரம், நோக்கம், பொருத்தப்பாடு, அசாதாரண நிலை, மனித தொடுகை (Human touch)

III. **MoJo காணொளிக் கதை நியமங்கள்:** காட்சியின் தரம் (Visual Quality) சட்டகமாக்கல் (Framing), ஒலி, செய்திச் சிகிச்சை (Message Treatement) புலனாய்வு மற்றும் ஆய்வு, நிலைத்து நிற்கும் கருத்து மற்றும் (Lasting Impression) மற்றும் தாக்கம் (Punch)

### தெரிவுக் குழாமின் (Editorial Board) வகிபாகம் என்ன?

கதையின் பெறுமானம் (Story Value), உண்மைத்தன்மை (Facts), உறுதிப்படுத்தும் சான்றுகள் (Authentication) மற்றும் கதைசொல்லல் கூறுகள் (Story-telling elements) போன்றவற்றை அடியாகக் கொண்டு தெரிவுக் குழாம் கதையை மதிப்புரை செய்யும். ஏதாவது தெளிவுகள் தேவைப்பட்டால் தெரிவுக் குழாம் MC Fellows ஐ தொடர்பு கொள்ளும். அப்படி ஏதும் இல்லாவிட்டால் அவர்கள் கதையை அனுமதிப்பர். தெரிவுக் குழாம் அனுமதி வழங்கும் கதைகள் மாத்திரமே நிகழ்ச்சித்திட்டத்தில் பகிரப்படும்.

### MC Fellow இற்கு ஒரே கதையை இன்னொரு செய்திச் சேவை முகவருக்கு சமர்ப்பிக்க முடியுமா?

இந்த செயற்பாட்டின் நோக்கமே உண்மையான தகவல்களை மக்களுக்கு பகிர்வதாகும். எனவே, SDJF இதனை எந்த காரணத்தைக் கொண்டும் தடுக்காது. எவ்வாறாயினும் MC பின்தொடரல் மாணவர்கள் குறித்த கதை MC Watch நிகழ்ச்சித்திட்டத்தில் முதலாவதாக பரப்பப்படும் வரை காத்திருக்க வேண்டும்.

### இதற்காக Fellows ஏதும் வழிகாட்டல்களை (Mentorship) பெற்றுக் கொள்ள முடியுமா?

ஆம் முடியும். Fellows தமது கதையை தயாரிப்பதற்கான வழிகாட்டல் உதவிகளை வழங்க 3 வழிகாட்டிகளை SDJF இதற்காக நியமிக்கும். பின்தொடரல் மாணவர் கதை ஒன்றைப் படமாக்கும் முன்னர் மற்றும் மட்டறுப்பு தொடர் செயன்முறையின் பொழுது வழிகாட்டியுடன் தொடர்பாட வேண்டும். வழிகாட்டியால் வழங்கப்படும் வழிகாட்டல்கள் கதைகளளை தெரிவுக்குழு அனுமதிப்பதில் ஒரு காரணியாக செயற்படும்.

### பின்தொடரல் மாணவர் ஒருவர் எவ்வேளைகளில் கதை வழிகாட்டியை வழிகாட்டலுக்காக தொடர்பு கொள்ளலாம்?

வழிகாட்டிகளை காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 2.00 மணி வரை ஒவ்வொரு நாளும் தொடர்பு கொள்ள முடியும்.

### நான் எனது வழிகாட்டியைத் தொடர்பு கொள்ளாமல் கதை ஒன்றைத் தயாரித்தால் என்ன நடக்கும்?

சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரம் கொண்ட MoJo கதைகளைத் தயாரிப்பதில் வழிகாட்டி ஒருவரின் வழிகாட்டல் முக்கியத்துவம் மிக்க காரணியாக அமைந்துள்ளது. நீங்கள் அதிகளவில் வழிகாட்டியுடன் உங்களுது கதை தொடர்பில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளும் பொழுது கதை சிறந்ததாக அமையும். எனவே அக்கதை தெரிவுக் குழாத்தினால் அனுமதிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பு கொண்டதாக மாறும். நீங்கள் உங்கள் வழிகாட்டியுடன் தொடர்பாடாவிட்டால் உங்களின் MoJo கதையை நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்க்கும் நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்க முடியாமல் போகும்.

### கொடுப்பனவு (Compensation) என்ன?

கதை தயாரிப்புக்கான தொகை, போக்குவரத்து, தொடர்பாடல் மற்றும் ஏனைய செலவுகள் என்பவற்றை உள்ளடக்கி MC Fellow இற்கு, ஒவ்வொரு கதைக்கும் கொடுப்பனவாக 10,000 ரூபா வரை வழங்க SDJF திட்டமிட்டுள்ளது. எவ்வாறாயினும் கதை ஒன்றுக்கான கொடுப்பனவு வீதம் தர மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவுள்ளது.

### ஒரு பின்தொடரல் மாணவரால் ஆல் எத்தனை கதைகளை சமர்ப்பிக்க முடியும்?

ஆரம்ப கட்டமாக, SDJF ஒரு பின்தொடரல் மாணவரிடமிருந்து குறைந்தது ஒரு மாதத்திற்கு 04 கதைகளை எதிர்பார்க்கிறது. (ஒரு வாரத்திற்கு ஒரு கதை என்ற அடிப்படையில்)

### எப்படி எமது கதைகளை பரப்புவது?

SDJF இன் பரப்புதல் திட்டத்தின் அடிப்படையில் கதைகள் பகிர / பரப்பப்படும். எது எப்படி இருப்பினும், தெரிவுக் குழாமின் அனுமதிக்குப் பின்னர், Fellows அவர்களது தனிப்பட்ட சமூக ஊடக மேடைகளிலும் அவர்கள் அறிந்த ஊடக தளங்களிலும் பகிர்வதற்கு உற்சாகப்படுத்தப்படுவர்.

### திட்டத்திற்குரிய கால வரையறை என்ன?

2020 ஜுன் 26 ஆம் திகதியில் இருந்து 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை.

**MC Fellows தங்களை ஒரு ஊடகவியலாளர் என்றோ அல்லது Fellow என்றோ அடையாளப்படுத்திக் கொள்வது எப்படி?**

எல்லா MC Fellows இற்கும், வெளி ஒளிப்பதிவுகளுக்கு செல்லும் சகல சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு வழங்கியுள்ள டி-சேர்ட்டை அணியுமாறு SDJF ஊக்குவிக்கிறது. எல்லா Fellows உம் SDJF இனால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை எல்லா நேரத்திலிலும் அணிந்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும்**

| செய்யக் கூடியவை | செய்யக் கூடாதவை |
|---|---|
| 1. எப்போதும் முகக் கவசம் மற்றும் கையுறைகளை அணிவதோடு 1 மீட்டர் இடைவெளியைப் பேணுங்கள்.<br>2. உங்களது கருவிகளை தொற்றுக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்<br>3. எப்போதும் தரவுகளின் உண்மை நிலையை ஆராயுங்கள் மற்றும் உறுதிப்படுத்துங்கள்.<br>4. முடிந்த அளவு சான்றுள்ள தகவல்களை பெற்றுக் கொள்ளுங்கள் (உத்தியோகபூர்வ மூலங்களிலிருந்து அதனைப் பெறுங்கள்)<br>5. நீங்கள் அறிக்கையிடும் போது நடுநிலை பேணுங்கள். (இருபக்க பார்வைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்)<br>6. புகைப்படங்கள், காணொளிகள், பெயர்கள் போன்றவற்றை உங்கள் கதைகளில் பயன்படுத்துகின்ற போது ஊடக தர்மத்தை பின்பற்றுங்கள்.<br>7. ஆராயுங்கள் மற்றும் ஆழமான புலனாய்வை | 1. குரல்களை பதிவு செய்ய இணைக்கும் ஒலிவாங்கியை (ஊடனி ழமெ ஆனைந) பயன்படுத்துங்கள்.<br>2. உங்களது ஆரோக்கியத்திற்கு முடியுமான அளவு பிரயத்தனம் எடுங்கள். ஒரு கதையை விட 1000 மடங்கு உங்களது ஆரோக்கியம் சிறந்தது.<br>3. நீங்கள் மற்றவர்களுக்கு ஒரு கதையாக இருங்கள். எப்போதும் நீங்கள் தொழில்வாண்மை மிக்கவராக நடந்துகொள்ளுங்கள்<br>4. சன நெரிசல் உள்ள இடங்களுக்குள் நுழையாதீர்கள். எப்போதும், குறைந்தது ஒரு மீட்டர் இடைவெளியை பேணுங்கள<br>5. எந்தவொரு நெருக்கடி சூழ்நிலையிலும் செய்தி சேகரிக்காதீர்கள். அது உங்களுக்கு ஆபத்தானதாகும்<br>6. உங்கள் கதைகளுக்கு உறுதிப்படுத்தப்படாத தகவல்களை பயன்படுத்துங்கள<br>7. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குழந்தைகளுடைய |

| | |
|---|---|
| மேற்கொள்ளுங்கள்ஃதரவுகளை சேகரியுங்கள்.<br>8. நீங்கள் அறிக்கையிடும் போது பாதுகாப்பு மற்றும் அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.<br>9. எப்போதும் முகக்கவசம் (ஆயளம) அணியுங்கள். உங்களது கருவிகளை பயன்படுத்துகின்ற போது கையுறையை (புடழளந) பயன்படுத்துங்கள்.<br>10. எப்போதும் கை கழுவும் கிருமி கொல்லித் துடைப்பான்களை (ளுயவைணைநச) உங்கள் வசம் வைத்துக் கொள்ளுங்கள்.<br>11. எல்லா நேரங்களிலும் உங்கள் உத்தியோக அடையாள அட்டையை கைவசம் வைத்துக் கொள்ளுங்கள்.<br>12. உங்களது திறன்பேசி சேமிப்பகத்தில் இடம் வைத்துக் கொள்ளுங்கள். அல்லது மேலதிக மெமரி அட்டை ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள்.<br>13. நீங்கள் களத்துக்கு செல்ல முன்னர் திறன் பேசியை 100மூ சார்ஜ் செய்து கொள்ளுங்கள். அல்லது பவர் பேங்கை பயன்படுத்துங்கள்.<br>14. அழைப்புகளை மேற்கொள்ள வேறொரு தொலைபேசியை பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது.<br>15. எப்போதும் நேர்காணல் பெறும் போது ஹேண்ட் ஃப்ரீ அல்லது எக்ஸ்டேர்னல் மைக்கைப் பயன்படுத்துங்கள்.<br>16. எல்லா நேரமும் டீ-சேர்ட்டுடன் அடையாள அட்டையையும் அணிந்து கொள்ளுங்கள். | புகைப்படங்களை நேரடியாக உங்கள் கதைகளில் பயன்படுத்துதல்.<br>8. நாட்டு சட்டங்களை மீறுதல். எப்போதும் சட்டத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளுங்கள் |

**அவசர நிலைகளின் போது எப்படி SDJF அல்லது CMIL ஐ தொடர்பு கொள்வது?**

உடன் அழையுங்கள்.

SDJF - Hasarel Gallage (Project Officer) - 071 631 5474

CMIL - Nirasha Piyawadani (Program Officer) - 077 734 0038